1973 டிசம்பர் 4]

செய்கிறார்கள். இரு தரப்பாருக்கும் பயன்படும் முறையில் பெரிய ஏரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பச்சை மலைத் தண்ணீரில் அப்படி ஒரு பெரிய திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விஸ்வகுடி கிராமத்தில் பல ஆண்டுகளாக 40 ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்து வந்தார்கள். அதற்கு மேல் சாகுபடிக்கு நீர் கொடுக்க முடியாது. கீழ் இருக்கும் வெங்குளம் கிராமத்தார் ஆயக்கட்டு பாதிக்கப்படும் அளவுக்கு அவர்கள் தண்ணீர் எடுக்கிறார்கள். கீழ் இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்படாத அளவிலே விஸ்வகுடி கிராமத்தாருக்கு 40 ஏக்கர் சாகுபடிக்கு மட்டும் நீர் கிடைக்கும் முறையிலே புதிய ஏற்பாட்டைச் செய்து குழாய் மதகைப் போட தலைமைப் பொறியாளர் ஆணை பிறப்பித்திருக்கிறார். அதுவே போதும் என்று அரசு கருதுகிறது.

### கீழ் கொள்ளிடம் அணை

***609 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் கொள்ளிடம் அணையை சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கீழ் அணையைக் கட்டி நீண்ட ஆண்டுகள் ஆகின்றன. அடிக்கடி பழுது ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. சீர்படுத்துவதற்குப் பரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பழுதுபட்டிருப்பது அங்கு இருக்கும் 'ஷட்டர்ஸ்' கதவுகள்தான். புதுப்பிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அடுத்த ஆண்டு கதவுகள் பொருத்தப் படும்